இறையரசு மலர

“அவர் உங்களுக்குச்
சொல்வதெல்லாம் செய்யுங்கள்” யோவான் 2:5

# DIOCESAN NEWS LETTER VELLORE

**(FOR PRIVATE CIRCULATION ONLY)**

**Vol. 11 FEBRUARY - 2015 No. 2**

## துறவியர் ஆண்டுக்கான தமிழக ஆயர் பேரவையின் திருமடல்

அன்புக்குரிய அருள்பணியாளர்களே, இருபால் துறவியரே, பொது நிலையினரே!

இயேசு கிறிஸ்துவின் அருளும் அமைதியும் உங்களுக்கு உரித்தாகுக! பயனுள்ள வகையில் துறவியர் ஆண்டினைக் கொண்டாடும் பொருட்டு தமிழக ஆயர்கள் அன்புடன் எழுதும் மடல்.

**“**துறவற வாழ்வைப் புதுப்பித்தல்**”** பற்றிய விதித் தொகுப்பை 2-ஆம் வத்திக்கான் பொதுச் சங்கம் அக்டோபர் 28, 1965 இல் வெளியிட்டது. அதன் 50-ஆம் ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையில், திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு நவம்பர் 30, 2014 முதல் நம் ஆண்டவர் இயேசு கோவிலில் அர்ப்பணிக்கப்பட்ட விழாவைக் கொண்டாடும் பிப்ரவரி 2, 2016 வரை உள்ள காலத்தைத் **“**துறவியர் ஆண்டு**”** என நம் திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்துள்ளார்.

துறவியர் தங்கள் அர்ப்பண வாழ்வைத் திறனாய்வு செய்யவும், ஆழப்படுத்தவும், தங்கள் இறைவாக்கினருக்குரிய சாட்சிய வாழ்வால் திருச்சபையின் உறுப்பினர் அனைவருக்கும் முன்மாதிரியாக இருக்கவும், கிறிஸ்துவின் நற்செய்தியை எல்லாருக்கும் அறிவிக்கத் தூண்டவும், இந்தத் துறவியர் ஆண்டை அவர் அறிவித்துள்ளார். “உலகை விழித்தெழச் செய்ய” என்பது இந்த துறவியர் ஆண்டின் மையச் செய்தி. அர்ப்பணிக்கப்பட்ட துறவியருடைய வாழ்வின் ஊற்று, இயல்பு,

சிறப்பு, அவசியம் ஆகியவற்றை எடுத்துக்கூறி, அவர்களுக்கு நம் அன்பையும் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்து, அவர்களோடு இணைந்து திருச்சபையையும் உலகையும் விழித்தெழச் செய்ய உழைக்குமாறு அனைவருக்கும் அழைப்பு விடுப்பதே இம்மடலின் நோக்கம்.

அர்ப்பண வாழ்வுக்கு அழைப்பு

"நீங்கள் தூயோராவதே கடவுளுடைய திருவுளம்" (1 தெச 4:3) என்கிற திருத்தூதர் பவுலின் அறிவுரையை மேற்கோள் காட்டி, "திருச்சபையில் உள்ள யாவரும், அதாவது திருச்சபையின் பணியாளரும், இரு பால் துறவியரும், மக்கள் அனைவரும் தூய்மை நிலைக்கு அழைக்கப் பெறுகின்றனர்" என்கிறது 2-ஆம் வத்திக்கான் பொதுச்சங்கம் ("திருச்சபை" பற்றிய கோட்பாட்டு ஏடு, எண் 39). ஆயினும் நம் ஆண்டவர் இயேசுவின் முன்மாதிரியையும் அவருடைய படிப்பினைகளையும் மிக நெருங்கிய முறையில் பின்பற்றி, பிளவுபடா உள்ளத்தோடு நற்செய்தி அறிவுரைகளை ஏற்று, கடவுளுக்குத் தங்களை முழுமையாகக் கையளித்து வாழும் துறவியரின் அர்ப்பண வாழ்வைத் திருச்சபை எப்போதும் ஊக்குவித்து, நெறிப்படுத்தி வந்துள்ளது.

துறவியர் தம் திருமுழுக்கின் செழுமை செறிந்த பலனை ஈடுபாட்டோடு வாழும் பொருட்டும், அதற்குத் தடையாக உள்ள அனைத்து இடையூறுகளையும் தவிர்க்கும் பொருட்டும் "ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல்" என்கிற நற்செய்தி அறிவுரைகளை ஏற்று வாழ முன்வருகின்றனர். கடவுளைப் பெருமைப்படுத்தி அவருக்கு முழுமையாகப் பணிபுரியத் தங்களையே அவர்கள் அர்ப்பணிக்கின்றனர். துறவறத்தாரின் இத்தகைய சிறப்பான அர்ப்பண வாழ்வு முழு திருச்சபையின் நலனுக்காகப் பயன்படுகிறது. இறையாட்சியின் நிறைவை நோக்கிப் பயணம் செய்கிற திருச்சபையில், துறவியர் இறைமக்களுக்குத் முன்மாதிரியாய் உள்ளனர். நற்செய்தி அறிவுரையை ஏற்று வாழும் துறவியர், தாம் இவ்வுலகில் வாழ்ந்தாலும் இவ்வுலகைச் சார்ந்தவர்கள் அல்லர் என்பதைத் தம் வாழ்வால் உணர்த்துகின்றனர். உலகக் கவலைகளிலிருந்து விடுதலை பெற்றவராய் வாழும் துறவியரின் வாழ்வு, இயேசுவின் மீட்புச் செயலால் நாம் ஏற்கெனவே அடைந்திருக்கிற வானக நலன்களை நமக்கு வெளிப்படுத்தி, நாம் பெறவிருக்கும் உயிர்ப்பையும் விண்ணக வாழ்வின் அருமையையும் நமக்கு முன்னுணர்த்துகிறது. இயேசு இவ்வுலகில்

வாழ்ந்து காட்டிய, தம் சீடரும் வாழவேண்டிப் பணித்த வாழ்க்கை முறையை நெருங்கிய வகையில் பின்பற்றுவதாகத் துறவியரின் அர்ப்பண வாழ்வு உள்ளது. இவ்வுலகக் காரியங்களைவிட இறையாட்சியும் அதன் விழுமியங்களும் மிக உயர்ந்தவை என்பதைச் சிறப்பான முறையில் அவர்களின் வாழ்வு வெளிப்படுத்துகிறது. கிறிஸ்து நம்மீது கொண்டுள்ள அளப்பரிய அன்பு, தூய ஆவியின் வரம்பில்லா வல்லமை முதலியன திருச்சபையில் செயல்படுவதைத் துறவியரின் வாழ்வு நம் எல்லாருக்கும் தெளிவுபடுத்துகிறது.

தங்கள் சபையின் தனிச்சிறப்பான பண்பிற்கு ஏற்பவும், தாங்கள் பெற்றுக்கொண்ட கொடைகளுக்கு ஏற்பவும், துறவியர் அனைவரும் தம் செப வாழ்வாலும் பணி வாழ்வாலும் உலகினரின் இதயங்களில் இறையாட்சியை வளர்த்தெடுக்கவும், உலகின் கடையெல்லைவரை நற்செய்தியை எடுத்துச் செல்லவும் சொல்லவும் கடமைப்பட்டுள்ளனர்.

துறவியரின் அர்ப்பண வாழ்வு இன்றைய காலக்கட்டத்தில் இறைவாக்கினருக்குரிய பணியாக இருக்கவேண்டும் என்பதை நம் திருத்தந்தை அழுத்தமாகச் சொல்கிறார். துறவியர் தங்கள் அருள்வாழ்வில் ஆழமாய் ஊன்றி நின்று, காலத்தின் அறிகுறிகளைப் பகுத்தாய்ந்து, கால-இடத் தேவைகளுக்குக்கேற்ப கடவுளின் திட்டத்தை உலகுக்கு உரத்த குரலிலும் ஆற்றல் மிக்க செயல்களாலும் எடுத்துரைப்பவர்களாய் வாழவேண்டும். எத்தகைய சமரசத்திற்கும் இடம் தராமல் கடவுளின் குரலாய் - இறைவாக்கினராய் - நற்செய்திக்காக உயிரையும் தரத் துணிகிற சாட்சிகளாய் வாழவேண்டும் என்பது திருத்தந்தையின் அறிவுரை. "உலகை விழித்தெழச் செய்கிறவர்களாய், இவ்வுலகப் போக்கிற்கு மாறான முறையில் வாழவும், செயல்படவும் கூடிய வாழ்க்கை சாத்தியமே என்பதற்குச் சாட்சியமாக வாழ" அவர் துறவியருக்கு அறைகூவல் விடுக்கிறார். "நடைமுறையில் சாத்தியம் இல்லாதவையாகத் தோன்றும் தாராளமனம், பற்றின்மை, தியாகம், பிறர் நலனுக்காகத் தன்னல மறுப்பு ஆகிய பண்புகள் நிறைந்த துறவற அர்ப்பண வாழ்வு மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும்; இத்தகைய சாட்சிய வாழ்வு துறவற வாழ்வின் "மறைச்சாட்சிய வீர மரணம்" ஆகும்" என்கிறார் நம் திருத்தந்தை.

அர்ப்பண வாழ்வுக்கான தளங்கள்

அர்ப்பணிக்கப்பட்ட துறவியர் மூன்று தளங்களில் தங்களின் அர்ப்பணத்தை வாழ்ந்து காட்டுகின்றனர். முதலில், தனி நபராக நற்செய்தி அறிவுரைகளைத் தங்களுடைய வாழ்வில் கடைப்பிடிப்பதால் தங்களது வாழ்வையே ஒரு சான்று வாழ்வாக, இறைவாக்கினர் தன்மை கொண்டதாக மாற்றுகின்றனர். சுகபோக வாழ்வு (hedonism), வரம்பற்ற சுதந்திரம் (limitless freedom), பொருளாசை (materialism) முதலியவற்றையே இன்றைய சமூகம் சிறந்த, உயர்வான, எப்படியும் அடையப்பட வேண்டிய இலக்குகளாகக் கருதுகிறது. இச்சூழலில் ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல், ஆகிய நற்செய்தி அறிவுரைகளை உயர்ந்த மதிப்பீடுகளாக விரும்பி ஏற்று வாழ்வது என்பதே இறைவாக்கினர் தன்மை கொண்ட சாட்சிய வாழ்வாகும்.

இரண்டாவதாக, குழும வாழ்வு. பல்வேறுபட்ட மொழி, இனம், பண்பாட்டுப் பின்புலங்களைக் கொண்டவர்கள் சகோதரப் பாசத்தோடு இறையாட்சிப் பணி என்னும் ஒரே நோக்கிற்காக ஒரு குழுமமாக இணைந்து வாழ்வதே வரம்பற்ற தனிமனித சுதந்திரத்தை உயர்ந்த மதிப்பீடாகக் கருதும் இன்றைய சமூகத்திற்கு ஒரு சவால். திருமணம் என்னும் அருளடையாளத்தின் வழியாக நிரந்தர உறவில் இணையத் தயங்கி, “கூடி வாழ்வோம், எப்பொழுது இந்தக் கூட்டு வாழ்வு கடினமாக இருக்கிறதோ அப்பொழுது பிரிந்து செல்வோம்” என்னும் மேலைநாட்டு இளையோரின் போக்கிற்கு, அர்ப்பணிக்கப்பட்ட துறவியரின் குழும வாழ்வு ஒரு சவால். கூட்டுக் குடும்பம் என்பது கடந்த கால மெய்மையாக மாறிக் கொண்டிருக்கும் இக்காலத்தில், அர்ப்பணிக்கப்பட்ட துறவியரின் குழும வாழ்வு என்பது ஒரு கலாச்சாரச் சவால்.

மூன்றாவது, பணி வாழ்வு. வெற்றியே தாரக மந்திரம், இலாபமே குறிக்கோள், போட்டியே அதற்கான வழிமுறை, திறன் கொண்ட பணியாளர்களே நம் தேவை என அனைத்தையும் சந்தை மயமாக்குவதே இன்றைய கலாச்சாரத்தின் மற்றொரு தோற்றம். இத்தகைய சூழலில் நன்கு படித்து வேலையில் அமர்ந்து தமக்கென ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள வாய்ப்புகளும் வசதிகளும் இருந்தும், பல இளைஞர் இளம்பெண்கள் பணம், பட்டம், பதவி ஆகியவற்றை ஒரு பொருட்டாகக் கருதாமல், துறவற வாழ்வில் நற்செய்தி அறிவுரைகளின்படி வாழ்வதே ஒரு மாற்றுக் கலாச்சாரச் செயல். அதேபோல், இல்லறத்தில் இன்புற்று வாழும் வாய்ப்பை விட்டுக்கொடுத்து,

மணத்துறவு மேற்கொண்டு வாழும் துறவற வாழ்வு, மனிதரைக்கூட ஒரு நுகர்வுப் பொருளாகப் பாவிக்கும் நுகர்வுக் கலாச்சாரத்திற்கு வலிமையான சவாலாகும்.

## உலகை விழித்தெழச் செய்ய

திருத்தந்தை பிரான்சிஸ் "உலகை விழித்தெழச் செய்ய" எனும் செய்தியை துறவியர் ஆண்டின் மையக் கருத்தாக வழங்கியுள்ளார். அதாவது, அர்ப்பணிக்கப்பட்ட துறவியர் தங்களுடைய வாழ்வாலும் பணியாலும் உலகை விழித்தெழச் செய்ய வேண்டும் என அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

திருத்தந்தையின் இந்த அழைப்பை அவர்கள் இரண்டு நிலைகளில் செய்ய வேண்டும். மனிதர் ஏற்படுத்தியுள்ள எல்லைக்கோடுகள் அனைத்தையும் கடந்து உலகில் நன்மனம் கொண்ட அனைவரையும் விழித்தெழச் செய்வது ஒருபுறம். அதே வேளையில், திருச்சபைக்குள் திருமுழுக்குப் பெற்றுள்ள அனைவரும் தங்களின் கிறிஸ்தவக் கடமைகளைச் செய்ய அவர்களைத் தூண்டுவது மறுபுறம். இவ்வாறு கிறிஸ்தவர்கள் அனைவரும் தங்களின் கிறிஸ்தவக் கடமைகளைச் செய்ய, அர்ப்பணிக்கப்பட்ட துறவியர் அவர்களைத் தூண்ட வேண்டும்; அவர்களுக்குத் துணை நிற்க வேண்டும். அப்படிச் செய்கின்றபோது கிறிஸ்தவச் சமூகத்தில் ஒவ்வொரு நிலையினருமே தங்களின் நிலைக்கு ஏற்ப நற்செய்தி அறிவுரைகளின்படி வாழத் தூண்டப்படுவர். அப்பொழுது கிறிஸ்தவச் சமூகம் முழுவதும் இந்த உலகை விழித்தெழச் செய்யும் பணியை ஆற்றும்.

நம் தனிப்பட்ட அனுபவம், விருப்பு, வெறுப்பின் பின்னணியில் துறவியரையும் அவர்களின் பணிகளையும் வாழ்வையும் நாம் விமர்சனம் செய்யும் போக்கு நம்மிடையே உண்டு. அதை விடுத்து, இந்த ஆண்டில் அவர்களது அர்ப்பண வாழ்வின் உள்ளர்த்தத்தையும் அருமையையும் உணர்ந்து அவர்களைப் போற்றுவோம். அவர்களது அருள்வாழ்வையும் பணிகளையும் நேர்நிலையோடு பார்க்கும் பக்குவம் பெறுவோம். கடவுளின் அமுதமொழிகளைக் கேட்டு, கடவுளுக்காகவும் நம் பொருட்டும் எதையுமே இழக்கத் துணிவுடன் முன்வந்துள்ள அவர்களை நம் அன்பிற்கினிய சகோதரர் சகோதரிகளாக, அவர்களது மனித இயல்பின் நிறை குறைகளோடு ஏற்றுக்கொள்வோம்.

செயல்பாட்டுக்கான சில பரிந்துரைகள்

குடும்ப அளவில்

- தினமும் குடும்பச் செபத்தில் துறவியரின் அர்ப்பணத்தை, அருள்வாழ்வை, உழைப்பை, கூட்டு வாழ்வை இறைவன் மிகுதியாக ஆசீர்வதிக்க செபித்தல்
- அவர்களின் குற்றங்குறைகளைப் பெற்றோர் தங்கள் பிள்ளைகள்முன் பேசாது, துறவறத்தின் அருமையைக் குழந்தைகள் உணர்ந்து போற்றும் வண்ணம் பேசுதல், நடந்து கொள்ளுதல்
- துறவியரை இல்லத்தில் மகிழ்வோடு வரவேற்றல்
- குடும்பத்தின் தேவைகளுக்காகச் செபிக்க துறவியரை வேண்டுதல்
- குடும்பத்திலிருந்து அர்ப்பண வாழ்வுக்காகக் குழந்தைகளை இறைவன் தேர்ந்து கொள்ளச் செபித்தல்
- குடும்பத்தினரின் பிறந்த நாள, பெயர் கொண்ட புனிதரின் திருநாள் , திருமணநாள் முதலிய நாள்களில் துறவியரைக் கண்டு ஆசி பெறுதல்
- கிறிஸ்து பிறப்பு, பாஸ்கா ஆகிய பெருவிழா நாள்களில் துறவியருடன் நம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுதல்

பங்கு அளவில்

- பங்குத் தளத்தில் துறவியரின் வாழ்வு, அர்ப்பணம், உழைப்பு, முயற்சிகள் முதலியன சிறக்கத் தினமும் செபித்தல்
- அவர்களின் பணியைப் பாராட்டி, ஊக்குவித்து, மகிழ்வித்து, மகிழ்தல்
- துறவற அர்ப்பண வாழ்வைத் தேர்ந்தெடுக்க இளையோருக்காகப் பங்கு அளவில் செபித்தல் செபிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல்

- அன்பிய, பக்த சபை, பிற அமைப்புக் கூட்டங்களில் துறவியர் கலந்து கொள்ளப் பங்குத் தந்தையின் பரிந்துரையின்படி அழைத்தல்

- துறவறச் சபைகளின் தனிப்பட்ட அழைப்பு, பணி நோக்கினைப் புரிந்து, மதித்து, உற்சாகப்படுத்துதல்

- இறையழைத்தலில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட இருபால் இளையோரைப் பங்கு அளவில் இனங்கண்டு, உற்சாகப்படுத்தி, ஊக்குவித்தல்

- இறையழைத்தலை ஊக்குவிக்கவும், அர்ப்பண வாழ்வில் ஆர்வத்தைத் தூண்டவும் பங்கிலுள்ள மாணவ மாணவியருக்காக இளையோர் தினம், கருத்தரங்குகள், தியானம் முதலியன ஏற்பாடு செய்தல்

- வெவ்வேறு துறவறச் சபையினரை – அவர்களின் அர்ப்பண வாழ்வை – சபையின் பணி நோக்கை – மக்களுக்கு அறிமுகப்படுத்த அழைத்தல்

- பங்குத் தந்தையரும் துறவியரும் அவ்வப்போது கலந்து ஆலோசித்து மேய்ப்புப் பணியில் துறவியர் ஈடுபாட்டோடு செயல்படத் தூண்டுதல், நல்லுறவுடன் வாழ்தல்

- குடும்பமாக, அன்பியமாக, பங்குக் குழுமமாகச் சென்று துறவியர் இல்லத்தைச் சந்தித்தல், அவர்களோடு உறவாடுதல்

- துறவியரின் பணிவாழ்வை, அன்றாடச் செயல்பாட்டை உடன் இருந்து பார்த்தல், உதவுதல்

- துறவியருடன் சேர்ந்து செபித்தல்.

மறைமாவட்ட அளவில்

- மறைமாவட்ட ஆயரின் திட்டம், அறிவுரை, அனுமதிக்கு ஏற்ப, “துறவியருடன் ஒரு நாள்” நிகழ்வு ஏற்பாடு செய்தல்

- துறவியர் ஆண்டுத் தொடக்க விழாவைச் சிறப்பாக நடத்துதல்
- துறவியர் பணியைப் போற்றுகின்ற விதத்திலே மறைமாவட்ட அளவில் துறவியர் ஆண்டு விழாவிற்கு ஏற்பாடு செய்தல்
- மறைமாவட்டத் துறவியர்ப் பேரவை அமைப்பிற்கு வலுவூட்டுதல்
- மறைமாவட்ட அருள்பணியாளர்கள் துறவியருக்கு இடையே கலந்துரையாடல் நிகழ்த்துதல்
- மறைமாவட்ட அருள்பணியாளர்களும், துறவியரும் இணைந்து மேற்கொள்ளும் சில செயல் திட்டங்களை உருவாக்குதல், செயல்படுத்துதல்.

இறுதியாக, துறவியர் ஆண்டில் நம் திருத்தந்தையின் அறிவுரைக்கு ஏற்ப, துறவியர் தங்கள் அர்ப்பணத்தினை ஆழப்படுத்திப் பற்றுறுதியுடன் வாழவும், அதன் வழியாக அருள்வாழ்வின் அருமையை உணரும் வண்ணம் இவ்வுலகினரை விழித்தெழச் செய்யவும் ஆவன செய்ய வேண்டுகிறோம். இறைமக்கள் துறவியரின் அர்ப்பண வாழ்வின் மேன்மையை எண்ணி அகமகிழவும், அவர்களின் பணிவாழ்வில் அவர்களுக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக இருக்கவும் வேண்டுகிறோம்.

இறை ஆசீர் உங்கள் அனைவரோடும் இருப்பதாக !

ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ்
தலைவர்
தமிழக ஆயர் பேரவை

**குறிப்பு : 2015 பிப்ரவரி 8 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை எல்லா பங்குத் தளங்களிலும் வாசிக்க கேட்டுக்கொள்கிறேன்.**

மேதகு. முனைவர். பெ. சௌந்தரராஜு, ச.ச.
வேலூர் ஆயர்

## Bishop's Programme

| | | |
|---|---|---|
| 01 | Sun | Chetpet |
| 02-10 | | CCBI - Bangalore |
| 11 | Wed | Madha TV |
| 13 | Fri | Chennai |
| 14 | Sat | Sneha Deepam |
| 15 | Sun | Feast Mass - Perambur |
| 18 | Wed | Ash Wednesday |
| 21 | Sat | TANCEAN |
| 22 | Sun | Confirmation- Jawadhu Hills |
| 24 | Tue | Consecration of new Bishop - Kuzhithurai |
| 26-28 | | TNBC - Kunnoor |

**+Most Rev. Dr. P.Soundararaju, SDB.,**
Bishop of Vellore

## VICAR GENERAL'S OFFICE

### Monthly recollection

Monthly Recollection for the month of February will be on 25 Wednesday, 2015.

The time table will be :

| | | |
|---|---|---|
| 09.30 am | - | Arrival & Coffee |
| 10.00 am | - | First Talk |
| 11.00 - 11.30 am | - | Break |
| 11.30 - 12.30 pm | - | Second Talk |
| 12.30 pm | - | Lunch |

2.30 - 3.30 pm - Adoration and Confession
3.30 pm - Announcements followed by Tea

**Rev. Msgr. I. John Robert**
Vicar General

## PROCURATOR'S OFFICE

## MISSION SUNDAY COLLECTION - 2014

| S.No | Religious | Amount |
|---|---|---|
| 1 | Ansaldo Educational Institutions | 20000 |
| 2 | Mangala Geetham - Anmarudai | 5000 |
| 3 | Don Bosco - Jawadhu Hills | 7100 |
| 4 | Servite Convent - Mekkalure | 1200 |
| 5 | D.M.Convent - Koottar | 1000 |
| 6 | Christu Jyothi High School - Thanipadi | 1000 |
| 7 | Christu jyothi Convent - Thanipadi | 500 |
| 8 | D.M.Convent - Udayarkuppam | 500 |
| 9 | Mary Immaculate Convent - Thirupattur | 3000 |
| 10 | Mazerello Home - Thirupattur | 3000 |
| 11 | Vimala Irudaya Convent - Chengam | 1000 |
| 12 | St.Charles Convent - Thirupattur | 5000 |
| 13 | St.Charles Convent - Jolarpet | 2000 |
| 14 | D.M.Convent - Eleyankanny | 2000 |
| 15 | Lourdu Madha Mat.School - Thandrampet | 3500 |
| 16 | Annai Velankanni School - Malikapuram | 2000 |
| 17 | Carmel Illam - Kolapplur | 1000 |
| 18 | Carmel Mat School - Kolappalur | 5000 |
| 19 | St.Charles Convent - Yelagiri | 3000 |
| 20 | St.Joseph Pri.School - Jolarpet | 5000 |
| 21 | Infant Jesus Mat School - Jolarpet | 15000 |
| 22 | St.Joseph's Girls School - Jolarpet | 30000 |
| 23 | St.Joseph's Woman College - Jolarpet | 10000 |
| 24 | Sacred Heart TTC - Vandavasi | 5000 |
| 25 | Cluny Convent - Kaveripakkam | 2500 |
| 26 | St.Louis Convent - A.Kattupadi | 3500 |
| | **Total** | **137800** |

| S.No | Parish | Amount |
|---|---|---|
| 1 | Uriurkuppam | 5000 |
| 2 | Narasingapuram | 5000 |
| 3 | Cathedral | 31350 |
| 4 | Japthikarani | 1200 |
| 5 | Ambur | 3000 |
| 6 | Haffieldspet | 6250 |
| 7 | Old Town | 20000 |
| 8 | Veppoor | 7920 |
| 9 | Pathiavaram | 8160 |
| 10 | Gudiyatham | 8050 |
| 11 | Melpudupakkam | 5000 |
| 12 | Shenbakkam | 10304 |
| 13 | Veeralur | 5000 |
| 14 | Arcot | 1000 |
| 15 | Christianpet | 13750 |
| 16 | Santhavasal | 6000 |
| 17 | Somasipadi | 4000 |
| 18 | Jolarpet | 65000 |
| 19 | Pavitram | 50000 |
| 20 | Arni | 21150 |
| 21 | Vettavalam | 130000 |
| 22 | Pallikonda | 8750 |
| 23 | Alappakkam | 10660 |
| 24 | Arakkonam | 146292 |
| 25 | Vaniyambadi | 1500 |
| 26 | Thandrampet | 4000 |
| 27 | Thachambadi | 46658 |
| 28 | Devikapuram | 5000 |
| 29 | Mazhuvankarunai | 10000 |
| 30 | Kilpennathur | 2646 |
| 31 | Chetpet | 70000 |
| 32 | Pulivanandal | 1000 |
| 33 | Chengam | 10117 |

| | | |
|---|---|---|
| 34 | Thanipadi | 3000 |
| 35 | Nallur | 1000 |
| 36 | Thirumalpadi | 2000 |
| 37 | Mekkalure | 1000 |
| 38 | Theresapuram | 2000 |
| 39 | Gengapattu | 3000 |
| 40 | Sanipoondi | 10000 |
| 42 | Perunduraipattu | 6000 |
| 43 | Kolappalur | 30000 |
| 44 | Koviloor | 5000 |
| 45 | Thenimalai | 5000 |
| 46 | A.Kattupadi | 12000 |
| 47 | Alliyandal | 3000 |
| 48 | Polur | 15000 |
| 49 | Tirupattur | 15000 |
| 50 | Kaniyambadi | 50550 |
| 51 | Gandhi Nagar | 36140 |
| 52 | Cheyyar | 8000 |
| 53 | Zamin Gudallore | 100000 |
| | **Total** | **1031447** |

Thanks for your generous contribution for Mission Sunday Collection. Those who have not yet sent Mission Sunday Collection, Kindly send to us as early as possible.

Dear Rev Fathers and Sisters,

Greetings to you from Bishop's House!

I kindly request you to send the bills and vouchers for project that you received and the Quarterly statements on or before 03 April 2015 to the Procurator's office.

**Rev. Fr. A.Kulandesu**

Procurator

## VELLORE SOCIAL SERVICE SOCIETY

06.01.2015 கடந்த மாதம் யூனியன் கூட்டத்தில் எடுத்த நடவடிக்கையின்படி டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு பணிக்காக 3 சங்கங்களின் உறுப்பினர்களை தேர்வு செய்து விழிப்புணர்வு கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி இவர்களுக்கு வேலைவாய்ப்பும் ஒருநாள் ஊதியம் ரூ.200–ம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

07, 08.01.2015 ஆகிய தேதிகளில் திருநெல்வேலி சமூக சேவை சங்கத்தில் டாசோஸ் மற்றும் காரிதாஸ் நிறுவனம் இணைந்து விவசாயம் பற்றிய கருத்தரங்கு இரண்டு நாள் நடத்தப்பட்டது. மண்வள பாதுகாப்பு, மண்புழு உற்பத்தி செய்தல், அஸ்ஸோலா, பூச்சி விரட்டி, கால்நடை தீவனம் பற்றிய பயிற்சி வழங்கப்பட்டது.

09.01.2015 திருச்சியில் “சோசியல் டீச்சிங் ஆப் சர்ச்” என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் வேலூர் சமூக சேவை சங்கத்தின், இரண்டு மகளிர் குழு தலைவிகள் கலந்துக்கொண்டனர்.

11.01.2015 லயோலா கல்லூரியில் நடைபெற்ற மதுவிலக்கு போராட்ட 100 நாள் நடைபயணத்தின் நிறைவுநாள் பயிற்சியில் மது இல்லா தமிழகம் உருவாக்கவும், தமிழகத்தில் உள்ள மது கடைகளை தகர்க்கவும், மதுவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கவுன்சிலிங் மற்றும் குடியிலிருந்து விடுபடவும், மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டது. இதில் ஒத்த சிந்தனை உள்ள சமுதாய போராளிகள் அனைவரும் கலந்துக்கொண்டு சிறப்பித்தார்கள்.

செய்தி தொகுப்பு

**Mrs. G.**பெலிசி ரொசிட்டா
ஒருங்கிணைப்பாளர்
வேலூர் சமூக சேவை சங்கம்

அருட்திரு. **A.R.**அந்தோணிசாமி
இயக்குநர்,
வேலூர் சமூக சேவை சங்கம்

## மறைவட்ட செய்திகள்

### தூய இருதய ஆண்டவர் ஆலயம், வந்தவாசி

எம் பங்கில் இயங்கிவருகின்ற 23 அன்பியங்களுக்கும், தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் செயலர்கள் அவரவர்களின் அன்பிய மக்களால் தேர்வுசெய்யப்பட்டார்கள். பிறகு 10–1–2015 அன்று புதியப் பங்குப்

பேரவையை உருவாக்க பங்குப் பேரவைத் துணைத் தலைவர், செயலர், இணைச்செயலர் மற்றும் பொருளருக்கான தேர்தல் நடைபெற்றது.

இறுதியாக 18.01.2015 ஞாயிறு அன்று நமது மறைமாவட்ட மேய்ப்புப்பணிநிலைய இயக்குநர் தந்தை அருட்பணி ஆரோக்கியசாமி அவர்கள் காலை 7.30 மணி திருப்பலிக்கு தலைமைதாங்கி தேர்ந்தெடுக்கப்பெற்ற அனைத்துப் பொறுப்பாளர்களுக்கும், பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

அருட்திரு. **N.A.**ஜான் பீட்டர், **V.F**
பங்குதந்தை,
தூய இருதய ஆண்டவர் ஆலயம்
வந்தவாசி

## மரியாயின் சேனை

11.1.2015 ஞாயிறு அன்று மரியாயின் சேனை கொமித்சிய கூட்டம் நடைபெற்றது. பேராலயத்தில், உதவி பங்குதந்தை அருட்பணி. சுதர்சன் அவர்கள் தலைமையில் நடந்த இந்த மாதாந்திர கூட்டத்தில், கொமித்சிய அலுவலர்கள் மற்றும் வந்தவாசி, ராணிப்பேட்டை, வேட்டவலம், திருப்பத்தூர், சேத்துப்பட்டு, காட்பாடி க்யூரியாக்களின் அலுவலர்களும், கட்டுபடி, சேண்பாக்கம், பள்ளிகொண்டா, பாகாயம், வேலூர் பேராலய ஆண்கள் பிரிசீடியம், பெண்கள் பிரிசீடியம், சிறுவர் பிரிசீடியத்தின் சேனையாளர்கள் 50 பேர் கலந்துகொண்டு சேனையின் பணிகள், எதிர்கால திட்டங்கள் பற்றி விவாதித்து பயன்பெற்றனர்.

17.1.2015 சனிக்கிழமை அன்று பேராலய பங்கில் இயங்கிவரும் ஆண்கள் பிரிசீடியம், பெண்கள் பிரிசீடியம் மற்றும் இளையோர் பிரிசீடியம் மூன்றும் ஒன்றாக இணைந்து மாலை 4.00 மணிக்கு தங்கள் பிரிசீடிய ஆண்டுவிழாவை கொண்டாடினர். பங்கு தந்தை பேரருட்பணி. எம்.ஜோ லூர்துசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சுமார் 40க்கும் மேற்பட்ட சேனையாளர்கள் கலந்துகொண்டு, தங்களுடைய ஓராண்டு செயல்பாடுகள் பற்றி அறிக்கை சமர்ப்பித்தனர்.

திரு. சூசை
கொமித்சிய பொருளர்

## Birthday

| | |
|---|---|
| Rev. Fr. P. Maran | 02.02.1982 |
| Rev. Fr. P. Arputharaj Rayan | 04.02.1947 |
| Rev. Fr. A. C. John Peter | 04.02.1976 |
| Rev. Fr. S. M. Anandaraj | 07.02.1965 |
| Rev. Fr. M. Sebastian | 09.02.1948 |
| Rev. Fr. M. Abraham | 09.02.1959 |
| Rev. Fr. M. Yesu Dass | 09.02.1981 |
| Rev. Fr. A. Robert | 15.02.1960 |
| Rev. Fr. L. Joseph Julian | 16.02.1952 |
| Rev. Fr. A. Don Bosco | 22.02.1981 |
| Rev. Fr. A. Rayappan | 23.02.1963 |
| Rev. Fr. A. Arulsamy | 27.02.1949 |
| Rev. Fr. A. Stephen | 27.02.1980 |

## Ordination

| | |
|---|---|
| Rev. Fr. A. Alphonse Doss | 02.02.1978 |
| Rev. Fr. D. Amalaraj | 02.02.1978 |
| Rev. Fr. A. Octavious | 02.02.1978 |
| Rev. Fr. M. A. Arockia Raj | 06.02.2000 |
| Rev. Fr. S. M. Anandaraj | 16.02.1997 |

## Necrology

| | |
|---|---|
| Rev. Br. Andrew Rouiller SDB | 01.02.1944 |
| Rev. Fr. Peter Mathew SDB | 05.02.2012 |
| Rev. Fr. Thomas George | 06.02.1989 |
| Rev. Fr. Ladislas Kli Mezyk SDB | 06.02.1974 |
| Rev. Fr. Luigi Di Fiore SDB | 12.02.1989 |
| Rev. Fr. Maria Arul SDB | 14.02.2004 |
| Rev. Fr. John Rathapillai, V.C. | 20.02.1989 |

## Intentions

Let us pray that prisoners, especially the young, may be able to rebuild lives of dignity.

Let us pray that married people who are separated may find welcome and support in the Christian community.

**Calender**

| | | |
|---|---|---|
| 01 | Sun | **4th Ordinary Sunday** |
| 02 | Mon | **Presentation of the Lord** *Feast* |
| 04 | Wed | St. John De Britto , *Feast* |
| 05 | Thu | St. Agatha, Virgin & Martyr, *Mem* |
| 06 | Fri | Sts. Paul Miki & Comp., Mrs., *Mem* |
| 08 | Sun | **5th Ordinary Sunday** |
| 10 | Tue | St. Scolastica Vir. *Mem* |
| 11 | Wed | Our Lady of Lourdes |
| 14 | Sat | Sts. Cyril & Methodius, Bps *Mem* |
| 15 | Sun | **6th Ordinary Sunday** |
| 17 | Tue | The Seven Founders of Servite Order Rel |
| 18 | Wed | **Ash Wednesday** |
| 21 | Sat | St. Peter Damian Bp., Dr. Optm. *Mem* |
| 22 | Sun | **1st Sunday of Lent** |
| 23 | Mon | St. Polycarp, Bp., Mr., Optn. *Mem* |

**R.I.P.**

In your charity, please pray for the repose of the soul of Mr. A. Yesudoss, beloved brother of Rev. Fr. A. Bernard Velanganni who died on 13.12.2014.

In your Charity, please pray for the repose of the soul of Mr. Y.Anthony, beloved brother of Rev. Fr. Y. Arockiyasamy who died on 31.12.2014 and also for the repose of the soul of Mr. A. Yagappan, beloved father of Rev. Fr. Y. Arockiyasamy who died on 14.01.2015.

In your Charity, please pray for the repose of the soul of Mr. M. Soosai, beloved brother of Rev. Fr. M. Peterraj who died on 22.01.2015.